மற்றும் தேசியமாக்கப்பட்ட வங்கிகளில் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. ஆனால், கூட்டுறவுச் சங்கங்களில் கொள்ளைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) திரு. சு. புகழேந்தி, உட்காருங்கள்.*

2—

துணை மின் நிலையத்தை தரம் உயர்த்துதல்

***2551—திரு. அ. நல்லதம்பி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, மட்றப்பள்ளியில் உள்ள துணை மின் நிலையத்தை தரம் உயர்த்தி, அதில் கட்டுப்பாட்டு அறை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடம் நாங்கள் வணங்குகின்ற எங்கள் இதய தெய்வத்தை முதலில் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதற்கிணங்க, திருப்பத்தூர் தொகுதியில், மட்றப்பள்ளி என்னும் இடத்தில் இயங்கி வரும் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை தரம் உயர்த்திடவும், அங்கே ஏற்கெனவே இருக்கின்ற 1 x 8 எம்.வி.ஏ. மின்மாற்றியில், மின் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் கூடுதலாக ஒரு 1 x 8 எம்.வி.ஏ. மின்மாற்றியை அமைப்பதற்கும், அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கட்டுப்பாட்டு

2017 ஜூன் 14]

அறை அமைப்பதற்கும் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி, மட்டறப்பள்ளி பகுதியில் 33/11 கி.வோ துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. அதைச் சுற்றியுள்ள ஜம்மனபுதூர், ஏ.கே. மோட்டூர், விசமங்கலம், உடையமுத்தூர் மற்றும் திம்மனமுத்தூர் ஆகிய பகுதிகள் அனைத்திலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்களும், பொதுமக்கள் வசிக்கின்ற குடியிருப்புப் பகுதிகளும் உள்ளன. விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற இந்தப் பகுதி ஏழையெளிய மக்களின் விவசாய பம்ப் செட்டுகளுக்கும், குடியிருப்புப் பகுதிகளுக்கும் முறையான, சீரான மின்சாரம் விநியோகம் செய்திட ஏதுவாக, மட்டறப்பள்ளி ஆளில்லா துணை மின் நிலையத்தினை கட்டுப்பாட்டு அறையுடன் கூடிய துணை மின் நிலையமாக அமைத்திட இந்த அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லும்போதே அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தேன். எனவே, கட்டுப்பாட்டு அறை அமைப்பது தொடர்பான பணிகளைப் பொறுத்தவரையில், முதல் தளப் பணிகள் முழுவதுமாக முடிவுற்றுள்ளன. இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, புதிய மின் மாற்றிகளும் அமைக்கப்பட்டு, அங்கு ஆளில்லா துணை மின் நிலையத்திற்கு ஊழியர்களை நியமித்தும், வருங்காலங்களில் மின் பளு குறைவு ஏற்படாத வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பார்த்துக் கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.*

திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில், மலைவாழ் மக்கள் முழுவதுமாக வசிக்கக்கூடிய ஜவ்வாது மலைத் தொடர்ச்சி, புதூர் நாடு, புங்கம்பட்டு நாடு மற்றும் நெல்லிவாசல் நாடு ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் சுமார் 25,000 மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த மலைப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் உள்ளன. இந்த விளைநிலங்களில் விளைகின்ற விவசாயப் பொருட்களை வியாபாரம் செய்து, தங்கள் வாழ்வாதாரத்தை அமைத்துக்கொள்வதற்கு ஏதுவாகவும், அங்குள்ள மக்களுக்கு தடையின்றி மின்சாரம் கிடைத்திடவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே அரசால் அறிவிக்கப்பட்ட 33/11 கி.வோ. வேலூர் துணை மின் நிலையத்திற்கு இடம் கையகப்படுத்தப்பட்டு, பணிகள் நடைபெறாமல் உள்ளன. எனவே, பணிகளைத் துரிதப்படுத்தி, இந்தத் துணை மின் நிலையத்தை விரைவாக அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரியிருந்தார். அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சிக் காலத்தில் 325 துணை மின் நிலையங்களை அமைத்திருக்கின்றது. இந்த ஓராண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட 58 துணை மின் நிலையங்களை அமைத்திருக்கின்றது. எந்தப் பகுதியில் மின் பளு அதிகமாக இருக்கின்றதோ, எந்தப் பகுதியில் தேவை அதிகமாக இருக்கின்றதோ, அந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் தற்போது நடந்த ஆய்வுக் கூட்டத்தில் இதுபோன்று மின் பளு குறைவாக இருக்கின்ற*

2017 ஜூன் 14]

இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இடத்தில், தேவையிருப்பின் மானியக் கோரிக்கையில் இதற்கான விளக்கம் அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். பொது இடங்களில், பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ள மின் கம்பங்களையும், மின்மாற்றிகளையும் எந்த நிபந்தனையும் இல்லாமல் வேறு இடத்திற்கு மாற்றித்தர அரசு முன்வருமா? அதற்கான நிபந்தனைகள் ஏதும் உள்ளதா? அரக்கோணம் தொகுதி, சம்பத்ராயன்பேட்டை கிராமத்தில் நடுத் தெருவில் உள்ள மின்மாற்றியை மாற்றித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதி, ஊராட்சிப் பகுதியாக இருந்தாலும் சரி, பேரூராட்சிப் பகுதியாக இருந்தாலும் சரி அல்லது நகராட்சிப் பகுதியாக இருந்தாலும் சரி, மின் கம்பத்தினை மாற்றியமைப்பதற்கு ஆகும் தொகையினை கட்டுகின்றபோது, அது மாற்றியமைக்கப்படும். அதேபோன்று, மின்மாற்றி ஊரின் நடுவில் உள்ளது என்று சொல்லியிருக்கின்றார். அதனை ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தின் மேல் மலைப் பகுதிகளாக இருக்கின்ற மன்னவனூர் ஊராட்சி, பூண்டி ஊராட்சி, கூக்கால் ஊராட்சி ஆகிய பகுதிகளில் மின் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வருகின்றது. குறிப்பாக, கூக்கால் ஊராட்சியில் வாழநேசம் சத்தியக்கரை என்கின்ற பகுதியில் ஒரு புதிய மின் மாற்றியினை அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதி கொடைக்கானல் மலைப் பகுதியாக இருக்கிறது. அப்பகுதியில் மின் பற்றாக்குறை என்பது கிடையாது; மின் அழுத்தம் குறைவாக இருந்திருக்கலாம். அதற்காகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்மாற்றியை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார். உடனடியாக அது ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

இரயில்வே மேம்பாலம்

***547—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—